## DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, SALEM.

S.C.No.217/2022

Deposition of witness for Prosecution – PW7

| | | | |
|---|---|---|---|
| Name | : ராமலிங்கம் | Caste | : |
| S/o. | : மாரிகவுண்டர் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed on 19.09.2025 in accordance with the provisions of Oaths Act No.44 of 1969.

Accused present.

முதல் விசாரணை :

நான் சங்ககிரி வட்டம், அரசிராமணி கிராமம், செட்டிப்பட்டி வன்னியர் தெருவில் குடியிருக்கிறேன். நான் விறகு உடைக்கும் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்குத் தெரியும். அவர் பெயர் போர்மன்னன். வழக்கில் இறந்துபோன ஆனந்தனை எனக்குத் தெரியும். நான், காளியப்பன், பூசாரி ஆனந்தன், மற்றும் எதிரி போர்மன்னன் ஆகியோர் சேர்ந்து கூட்டாக விறகு உடைக்கும் மிஷின் போட்டு தொழில் செய்து வந்தோம். ஆளுக்கு ரூ.90,000/– முதலீடு

செய்தோம். எதிரி போர்மன்னனின் மனைவி கிணற்று அருகே துணி துவைக்கும்போது தவறி விழுந்து இறந்துவிட்டார். அதன்பின்னர் போர் மன்னன் எங்களிடம் கூட்டிலிருந்து விலகிக்கொள்வதாகவும் அதற்கு அவர் போட்ட முதலை திருப்பி தருமாறு கேட்டார். அதற்கு அவர் போட்ட முதல் ரூ,90,000/– மற்றும் வட்டி ரூ.5000/– மொத்தம் ரூ.95,000/– செலுத்தி விட்டோம். பின்னர் நாங்கள் மூவரும் தனியாக தொழில் செய்து வந்தோம். எதிரி அதற்கு பின்னர் தன்னை நாங்கள் ஏமாற்றிவிட்டதாக கூறி எங்களை பேசி வருவார். நாங்கள் எதுவும் கண்டுகொள்ளாமல் இருந்தோம்.

3 ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு நாள் இரவு 2.00 மணிக்கு நான் சென்று பார்த்தபோது ஆனந்தன் கழுத்து நெற்றி தோள்பட்டையில் வெட்டுப்பட்டு இறந்துகிடந்தார். ஆனந்தன் கோவிலில் இருந்தபோது போர்மன்னன் அவரை வெட்டிவிட்டார். அதனால் ஆனந்தன் இறந்துவிட்டார். அன்று இரவே என்னையும் வெட்ட போர்மன்னன் வந்தார். எங்கள் வீட்டில் இருந்த நாய் குரைத்ததா'ல் அவர் சென்றுவிட்டார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

ஆனந்தன் எனக்கு பங்காளி என்றால் இல்லை. நான் சம்பவ இடத்திற்கு சென்றபோது எத்தனை பேர் இருந்தார்கள் என்றால் 20 பேருக்கு அதிகமாக இருந்தார்கள். அங்கு போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் அன்றே நான் தேவூர் காவல்நிலையம் சென்றேன், போலிசார் அங்கு என்னை விசாரித்தார்கள்.

காவல்நிலையத்தில் எதிரி போர்மன்னன் இருந்தாரா என்றால் இருந்தார். மறுநாள் பேப்பர் மற்றும் டிவியில் போர்மன்னனை கைது செய்துவிட்டதாக வந்ததா என்றால் நான் பேப்பர் படிப்பதில்லை, அதனால் அதுபற்றி தெரியாது.

காவல்நிலையத்திற்கு எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் 8.00 மணிக்கு சென்றேன். ஊர்க்காரர்கள் உடன் இருந்தார்களா என்றால் இருந்தார்கள். நானும் ஊர்மக்களும் காவல்நிலையத்தில் போர்மன்னனை பார்த்தோமா என்றால் பார்த்தோம். கூட்டாக 15 வருடம் தொழில் செய்து வந்ததாக போலிஸ் விசாரணையில் கூறி உள்ளேனா என்றால் கூறி உள்ளேன். பூசாரி ஆனந்தனின் மகன் சித்தநாதன், கூட்டை கலைத்துவிட்டதால் டிராக்டரை அவர் எடுத்து சென்றுவிட்டார். போலிஸ் என்னை விசாரித்தபோது சித்தநாதன் கூட்டை கலைத்து அவர் பங்கிற்கு டிராக்டரை எடுத்து சென்றதாக கூறி உள்ளேன் என்றால் சரி. சித்தநாதன் எங்களுடன் கூட்டாக தொழில் செய்யவில்லை என்றும் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/- S.Sumathy,
Principal Sessions Judge, Salem.